Registered as a Newspaper

நொதேண் இன்ஸ்ரிரியூட்
A\L 87
பௌதிகவியல் - ஓரியியல்
இரசாயனவியல் - அடிப்படை
பிரயோக கணிதம் - விசைப்பிரிப்பு
தூயகணிதம் - இருபடிச்சார்பு
நடைபெறுகின்றன.
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

# உதயன்

விலை ரூ. 1/=

நொதேண் இன்ஸ்ரிரியூட்
O|L 2ம் பிரிவு
ஆரம்பம்: 03-02-86
6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புகள்
நடைபெறுகின்றன.
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆு தை மீ 16 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 18 (29.01.1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்: 62

நாரளையில் : 9 இடங்களில் ஊரடங்கு
தலைநகரில் : 24 மணி நேர உஷார் உத்தரவு

# மலையகத்தில் தீவைப்பு, கொள்ளை;

# கொழும்பிலும் பதற்றம்

## தமிழர் ஒருவரை உயிரோடு எரிக்க நடந்த முயற்சி

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜன. 29

தலவக்கலையில் கடந்த ஞாயிறு வெடித்த வன்செயல்கள் நேற்று மிக மோசம் அடைந்தன. கொள்ளை, தீவைப்பு ஆகியன இடம்பெற்றன.

அவற்றைத் தொடர்ந்து நுவரெலியாவில் உள்ள ஒன்பது பிரதேசங்களில் பத்து மணி நேர உத்தியோக பூர்வ ஊரடங்கு நேற்று அமுல் செய்யப்பட்டது.

இதே வேளை கொழும்பில் நிலவிய பதற்றம் பரவாதிருப்பதற்காகப் பொலீஸ் மற்றும் முப்படைகளுக்கு 24 மணிநேர உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தலைநகரின் கேந்திர ஸ்தானங்களில் ஆயுதம் தாங்கிய படை வீரர்கள் நேற்று இரவு காவலுக்கு நிறுத்தப்பட்டனர். ரோந்துச் சேவையும் நடத்தப்பட்டது.

நேற்றிரவு சுமார் 8 மணியளவில் விடுக்கப்பட்ட அவசர உத்தரவின் பிரகாரம் மேற்கண்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த தலவாக்கலையில் ஆரம்பித்த கலவரம் நேற்று வேறு பல இடங்களுக்கும் பரவியது.

தலவாக்கலை பஜாரில் நேற்று அதிகாலை தமிழர்களுக்குச் சொந்தமான ஆறு கடைகள் கொள்ளை அடிக்கப்பட்டு, பின்னர் தீக்கிரையாக்கப்பட்டன.

ரயில் ஒன்று மறிக்கப்பட்டு தமிழ்ப் பிரயாணிகளின் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைக்குத் தீர்வுகாண புதுவித போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 29

இனப்பிரச்சினைக்குஉடனடியாக தீர்வு காண வேண்டி புதுவிதமான போராட்டம் ஒன்றை நடத்த வடபகுதியில் உள்ள முக்கிய பிரமுகர்கள் சிலரைக் கொண்ட குழு ஒன்று ஏற்பாடு செய்துவருகிறது.

அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டத்தை நடத்த அக்குழு தீர்மானித்திருக்கிறது.

போராட்டத் தினமன்று வடமாகாணத்தில் மக்கள் எவரும் தத்தமது வீட்டை விட்டு வெளியேருதுஉள்ளிருந்து பிரச்சினைக்குத் தீர்வு

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று தேடுதல்

### கிராமசேவகர் தடுத்துவைப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு விமான நிலையத்தை அண்டியுள்ள புதூர் கிராமம் நேற்று அதிகாலை முதல் ஆயுதப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

கல்லடி முகாமைச் சேர்ந்த அதிரடிப் படையினர், மட்டக்களப்புப் பொலீஸார், விமானப் படை சிப்பாய்கள் ஆகியோர் கூட்டாக இத் தேடுதலை நடத்தினர்.

அப்பகுதி கிராமசேவையாளர் உட்பட 150பேர் வரை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கல்லடி முகாமில் முகமூடி நபர்கள் முன்னால் ஆஜர் செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் கிராம சேவையாளரும் இன்னும் நான்குபேரையும் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

## சுபநேரம்

29.1.1986

புதன்கிழமை

சுபநேரம்:
5.06 முதல் 6.36 வரை

ராகுகாலம்:
12.36 முதல் 2.06 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## நேற்று வவுனியாவில் பலர் கைது

வவுனியா, ஜன. 29

வவுனியாவில் நேற்றுக் காலை பலத்த தேடுதல் நடைபெற்றது. காலை தொடக்கம் ஆயுதப் படையினர் சல்லடை போட்டுத் தேடுதல்நடத்தினுர்கள்.

முகமூடி அணிந்தவர்களை வாகனங்களிலிருந்து இறக்கிய சிப்பாய்கள் அவர்கள் முன் பலரை ஆஜர் படுத்தினுர்கள். முகமூடி அணிந்தவர்கள் சைகைகாட்ட பலரைக் கைது செய்தனர்.

நேற்றைய தேடுதலினல்வவுனியாவில் பெரும் பதற்றம் நிலவியது.

### குடாநாட்டில்

## சீனி, மாவுக்கு தட்டுப்பாடு இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். குடாநாட்டில் சீனி, மா தட்டுப்பாடு கிடையாது.

மேலும் இரண்டு கப்பல்கள் சீனியுடன் அடுத்த வாரம் காங்கேசன்துறை துறைமுகம் வந்து சேரும்.

கடைசியாக ஜனவரி 20 ஆம் திகதி "செரண்டிப்" என்ற கப்பலில் 950 மெட்ரிக் தொன் சீனி யாழ் வந்தது.

ஐந்து வாரகால இடைவெளியின் பின்னர் இச் சீனி வந்தது.

டிசம்பர் 13 இல் "தங்காலை" என்ற கப்பலில் 950 மெட்ரிக் தொன் சீனி வந்த பின்னர் 1986 இல் வந்த முதல் சீனிக் கப்பல் இதுதான்.

அடுத்த வாரம் "மத்துறட்ட", "மாத்தறை" ஆகிய இரண்டு கப்பல்கள் தலா 950 மெட்ரிக் தொன் சீனியுடன் காங்கேசனுக்கு வர உள்ளன.

அரிசி தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கத் தேவையான ஏற்பாடுகளை யாழ். அரச அதிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில்

## ஹர்த்தால்

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இருதயபுரம் பகுதியில் அண்மையில் பொதுமக்கள் கொலையுண்டதை ஆட்சேபித்து இந்த ஹர்த்தாலை ஈரோஸ் இயக்கம் ஒழுங்கு செய்திருக்கிறது.

### முச்சந்தி முரளி



முப்பத்தெட்டு வருஷமா தீர்க்க முடியாத விஷயத்தை மூண்டு நாளிலை தீர்ப்பார் எண்டே அச்சாணியார் சொல்லுறூர். அவருக்கு இப்ப கொஞ்ச நாளாய் உப்பிடித்தான் குலைப்பன் காச்சல் அடிக்கடி வருகுது......!

## ரயில் விபத்து

மேற்கு வங்கத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நிகழ்ந்த பயங்கர ரயில் விபத்தொன்றில் 5 பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் படுகாயமடைந்தனர்.

### கூட்டணியின் யோசனை

## அரசாங்கத்தின் பதில் மூன்று நாட்களில்

கொழும்பு, ஜன. 29

அடுத்த மூன்று தினங்களுக்கு இடையில் இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசின் பதில் தயாரிக்கப்பட்டுவிடும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சொன்னர்.

கூட்டணியின் மாற்று யோசனைகள்பற்றி இலங்கை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாகவும் அமைச்சர் சொன்னர்.

## நகர சுத்திகரிப்பு வேலைகள் இன்று தொடக்கம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். மாநகர சபையின் ஏழாவது டிரக்டரும் இனந் தெரியாதோரால் நேற்றுக் கடத்திச் செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் விடுத்த அறிக்கை ஒன்றில் கடத்தப்பட்ட ஏழு டிராக்டர்களும் திருப்பித் தரப்படும்வரை சுகாதார சேவைகள் மேற்கொள்ளப்படமாட்டா என்று அறிவித்துள்ளார்.

இன்று தொடக்கம் யாழ். மாநகரில் சுகாதார சேவைகள் இடம் பெறமாட்டாது என்றும் ஆணையாளர் அறிவித்தார்.

யாழ் மாநகர சபையிடம் தற்சமயம் இருப்பது ஒரேஒருபழுதடைந்த டிராக்டர் மட்டுமே.

நேற்றுக்காலை நல்லூரில் உள்ள மாநகரசபை வேலைத்தலத்தினுள் புகுந்த இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியே டிராக்டரை, றெயிலருடன் கடத்திச் சென்றது.

திருநெல்வேலி விவசாயப்பாடசாலைக்கு அரு

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை

கொழும்பு, ஜன. 29

கிளிநொச்சி இராணுவ முகாமில் பணிபுரிந்த சிப்பாய் ஒருவர் இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் எனத் தெரிகிறது.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிப்பாயே அவராவர்.

இதேவேளை இந்தச் சம்பவம் சம்பந்தமாக மேலும் ஐந்து சிப்பாய்கள் விசாரணைக்காகக் கொழும்பு கொண்டு செல்லப்பட்டிருக்கிருர்கள்.

## வயோதிபர் இலக்கானுர்

நல்லூர், ஜன. 29

நேற்று மதியம் கட்டுவன் சந்தியில் பலாலிப் பக்கம் இருந்து வந்த துப்பாக்கிக் குண்டு ஒன்றுக்கு வயோதிபர் ஒருவர் இலக்கானுர்.

செல்லையா பரமேஸ்வரன் (வயது 55) என்பவரே காயமடைந்தவர். அவரது இடுப்பைக் குண்டு தாக்கியிருக்கிறது.

அவர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிருர்.

## இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வா? இந்தியா விளக்கம் கேட்கும்

புதுடில்லி, ஜன. 28

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணப்படலாம் என்றவாறு இலங்கைத் தலைவர்கள் கூறியது இந்தியாவின் கவனத்தை ஈர்த்துள்ளது.

திரு. ரொமேஷ் பண்டாரி கொழும்புசெல்லும்போது இது குறித்து இலங்கைத் தலைவர்களிடம் நேரில் விளக்கம் கேட்பார்.

இவ்வாறுஇந்தியவெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பகத் இன்று இங்கு தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சின் ஆலோசனை குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார். அப்போதே இதனைத் தெரிவித்தார்.

வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ்பண்டாரி மிக விரைவில் இலங்கை செல்ல இருக்கிருர் என்றும் அவர் தகவல் தந்தார்.

## அரசாங்கமே!

★ பாதுகாப்பு வலயத்தை ரத்து செய்
★ இராணுவ முகாம்களை அகற்று

# யாழ். நகரில்

# இன்று: பேரணி

# கடையடைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29

இன்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கடையடைப்பு இடம் பெறுகின்றன.

பாதுகாப்பு வலயங்கள் பிரகடனம் வாபஸ் வாங்கப்படவேண்டும்.

கோட்டையிலிருந்து இராணுவ முகாம் அகற்றப் பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது நல ஸ்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், மாணவர் மன்றங்கள் ஈழவர் முன்னணி ஆகியவை இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

யாழ் மாவட்டக் கூட்டுறவாளர்கள், பணியாளர்களின் கண்டன ஊர்வலம் காலை 8.45 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் இருந்து ஆரம்பமாகிறது.

வரதராஜப் பெருமாள் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும் வடபிரதேசத் தொழிற் சங்கக் கூட்டுக் குழுவின் ஊர்வலத்துடன் இந்த ஊர்வலம் இணைந்து கொள்ளும்.

இந்த ஊர்வலத்தில் வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்

(4-ம் பக்கம் பார்க்க)

## பனையில் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் சோகக் கதை

கிளிநொச்சி, ஜன. 29

ஒரே குடும்ப சகோதரர் நால்வர் அடுத்தடுத்து மரணமாகினர். ஐந்தாவது நபர் இராணுவத்தினுல் கைது செய்யப்பட்டார்.

தந்தை ஏக்கத்தில் உயிரிழந்தார். இதனுல் தாயார் சுயநினைவிழந்தார்.

சகோதரி இராணுவப் பிடியிலிருக்கும் தனது தம்பியை மீட்டுத் தருமாறு கண்ணீர் மல்கிய நிலையில் கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவுக்குப் புகார் செய்திருக்கிருர்.

இச் சோக சம்பவம் பனைப் பகுதியில் நடைபெற்றிருக்கிறது. இச் சம்பவம்பற்றி திருமதி. கந்தையா மங்கையற்கரசி

(4-ம் பக்கம் பார்க்க)

# லலித்தின் அழைப்பை அன்னையர் முன்னணி தூக்கி எறிந்தது!

யாழ்ப்பாணம், ஜன. 29

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாகப் பேச வருமபடி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி விடுத்த அழைப்பை, யாழ்ப்பாணம் 'அன்னையர் முன்னணி' நிராகரித்துவிட்டது.

மலையக சகோதரர், சகோதரிகள் தாக்கப்படும் இத்தருணத்தில் பாதுகாப்பு அமைச்சரைச் சந்திப்பது அவசியம் இல்லை—இப்படி அன்னையர் முன்னணி, அழைப்பை நிராகரித்து அனுப்பிய பதிலில் கூறியுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மகிழ்வுடன் ஈழம் வந்த 'மனோரமா' சொல்கிறார்

தினசரி சினிமா

திரையுலகிலே ஹாஸ்யத்துக்கு தனக்கென ஓர் இடம் பிடித்துக் கொண்டவர் மகிழ்ச்சி நடிகையான மனோரமா. அவரில்லாமல் ஒரு படமா? எனுமளவுக்குப் பிரபலமாகி விட்ட நடிகை மனோரமா ஈழ நாட்டில் அவருக்குநடிக்கக்கிடைத்த "சான்ஸ்" பற்றி அவரே சொல்கிறார்:

படத் தயாரிப்பாளர் பாலாஜி தன் படங்களில் எனக்கு எப்படியாவது ஒரு கதாப்பாத்திரத்தை உருவாக்கித் தந்து விடுவார். 'தீ' படப்பிடிப்பு இலங்கையில் நடந்தது. அப்போது எனக்கு ஒரு தந்தி வந்தது.

"எப்படியாவது உடனே 'பிளேன்' ஏறி இங்கு வந்து விடு நீ இல்லாமல் இப்படத்தை எடுக்க என் மனம் ஒப்பவில்லை. உனக்கென்று ஒரு பாத்திரத்தை 'சிருஷ்டி' பண்ணியிருக்கிறேன்." – இது பாலாஜி ஈழத்திலிருந்து எனக்கு அடித்த தந்தியின் வாசகங்கள்.

உடனே ஸ்ரீலங்காவுக்குப் புறப்பட்டு வந்தேன்.

படத் தயாரிப்பாளர் பாலாஜி அவர்கள் என்னைக் கண்டவுடன் முகமலர்ச்சியோடு வரவேற்றார். "எப்படியும் நீ வந்து விடுவாய் என்று எனக்குத் தெரியும். நீ இல்லாமல் எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. இன்றைக்கே படப்பிடிப்பு ஆரம்பம்" என்றார் அவர்.

'தீ' படப்பிடிப்பு தீவிரமாக நடந்தது 'அவசரம் அவசரமாய் ஒரே நாளில் நடித்து முடித்தேன். படம் 'ஓஹோ' என்று ஓடியது. அதன் வெற்றியில் எனக்கும் பங்குண்டு" என்று மன மகிழ்ச்சியுடன் மலர்ச்சியோடு கூறினார் மனோரமா.

மினி சினிமா

புதிய வெளியீடு!

**நவா மினி** (உஷா மினி முன்பாக)

DOGS OF WAR, MISSING IN ACTION, RAMBO
வரிசையில்
RICHARD HARRIS இராணுவத் தளபதியாக
RICHARD ROUNDREE கெரில்லாத் தலைவராக

**Game for Vultures**

காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பான தாக்குதல்களைக் கொண்டது.
இராணுவ விமானத்தையே தகர்க்கும் வீரசாகசம்
(முழுக்க முழுக்க நவீன ஆயுதம்)
* முதலாவதாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.

★ ஆப்கான் விவகாரம்

# ஜெனீவாவில் இரகசிய உடன்பாடு

### சோவியத் செய்தி தகவல்

ஜெனீவா, ஜன. 28

ஆப்கானிஸ்தான்போர் குறித்து ஜெனீவாவில் நடைபெற்ற இரகசியப் பேச்சு வார்த்தைகளில் 3 அம்ச பொது உடன்பாடொன்று காணப்பட்டுள்ளது.

சோவியத் செய்தி ஏஜன்சி ஒன்று இத்தகவலை வெளியிட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆபுகானிஸ்தான் தலைவர் பார்பரஸ் கர்மால் காபூலில் செய்தியாளர் மாநாடொன்றில் இதை அறிவித்துள்ளார்.

இந்த உடன்பாட்டில், ஒருநாடு இன்னொரு நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருக்க சர்வதேச உத்தரவாதம் ஒன்றை ஏற்படுத்துவது.

ஆப்கான் அகதிகள் தாமாகத் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்வது ஆகிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளதாக சோவியத் ஏஜன்சிசெய்தி தெரிவித்தது.

எனினும் ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்ய துருப்புகளின் வெளியேற்றம்தொடர்பான4ஆவது அம்சத்தில் பேச்சுதடைப் பட்டு விட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கையில் கொலைகள்

### இந்தியா கவலை

புதுடில்லி, ஜன. 28

இலங்கையில்தொடர்ச்சியாக பெருகிவரும் வன்முறை சம்பவங்கள் பற்றிய செய்திகளும் இலங்கை அதிகாரிகளின் அறிக்கைகளும் மிகுந்த கவலைக்குரியனவாக உள்ளன.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மக்கள் பலர் இந்த வன்முறைகளால் கொல்லப்படுவது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதியை சந்தித்து பேசுமாறு கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் பணிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## கடாபியின் எச்சரிக்கை

எதென்ஸ், ஜன. 28

லிபியாமீது அமெரிக்கா தாக்குதல் மேற்கொள்ளும் பட்சத்தில் மத்திய தரைக்கடலிலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள்மீது பலத்த தாக்குதல் மேற்கொள்ளப் படும்.

இவ்வாறு கேர்ணல் கடாபி அறிவித்துள்ளதாக 'எத்னேஸ்' என்ற கிரேக்க பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எந்தத் தளங்கள் லிபியாமீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு உதவியளிக்கிறதோ அந்தத் தளங்களில் லிபியா தாக்குதல் மேற்கொள்ளும்.

தங்கள் நாடுகளிலுள்ள அமெரிக்கத் தளங்களை அகற்றுமாறு ஐரோப்பிய நாடுகளை கேர்ணல் கடாபி கேட்டுள்ளார். இவ்வாறு 'எத்னேஸ்' பத்திரிகை மேலும் தெரிவித்தது

## இன்றைய போராட்டம் வெகுஜன போராட்டமாக உருமாறி வருகிறது

### சுன்னாகம் கூட்டத்தில் உரை

சுன்னாகம், ஜன. 29

இன்றைய போராட்டம் வெகுஜனப் போராட்டமாக உருமாறியுள்ளது.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் திங்களன்று நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அறிமுகம் செய்யப்படாத ஒருவர் மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் முன்றலில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-


எமது போராட்ட வரலாற்றில் மக்கள் முழு மனதுடனும் துணிச்சலுடனும் இவ்வாறான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் பங்கு கொண்டது எமது போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும் என்ற உண்மையை தெளிவாக உணர்த்துகிறது என்றார்.

தமிழீழமே எங்கள் தாயகம் என்ற கோஷங்கள் கூட்டத்தில் எழுப்பப்பட்டன.

ஊர்வலத்துக்கும் பொதுக்கூட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்து வர்த்தகர்கள் கடை அடைப்புச் செய்தனர்.

கூட்டமுடிவில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன - இஸ்ரேல் பிரதமர் சிமொன் பெரஸ், அமெரிக்க ஜனாதிபதி றேகன் ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

## சேவை நலம் பாராட்டு



வட்டுக்கோட்டை, ஜன. 29

வட்டுக்கோட்டைப் பகுதி பிறப்பு, இறப்பு பதிவாளராகவும் விவாகப் பதிவுகாரராகவும் கடமையாற்றிய திரு.க. கிருஷ்ணர் இளைப்பாறியுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள சங்கங்கள் பலவற்றில் முக்கிய பதவிகள் வகித்த இவர் கொழும்பு ஆதிருப்பள்ளி வீதியில் தனது வைத்தியத் தொழிலை ஆரம்பித்து கொழும்பு ஸ்ரீவித்தியாகான சபைத் தலைவராக இருந்து சங்கீத, நடன, நாடகத்துறை வளர்ச்சிக்கு உதவிபுரிந்தவர்.

சுமார் 36 ஆண்டுகளாக பதிவாளராகவும் பதிவு காரராகவும் கடமையாற்றிய திரு. கிருஷ்ணர் பொதுமக்களுடன் அன்பாக பழகி கடமையைக் கண்ணியமாக மேற்கொண்டு மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றவர்.

மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்ற இவர் 25 வருடங்கள் யாழ் மாவட்ட பதிவாளர் சங்கச் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார்.

வயதெல்லை அடைந்த காரணத்தால் இளைப்பாறியுள்ள இவருக்கு சேவை நலம் பாராட்டு விழாக்கள் நடத்த பொது ஸ்தாபனங்கள் பல முன்வந்துள்ளன.

வெளி உலகில்

## சீனா ஏவுகணை பரீட்சை

### வெற்றியளித்துள்ளதாக அரசு ஏடுகள் பாராட்டு

பீகிங், ஜன. 28

சீனாவில் இதற்கு முன் இருந்ததைவிடவும் சக்தி வாய்ந்த யுத்த ஏவுகணைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளன.

இது ஒரு வெற்றிகரமான நடவடிக்கையென சீன செய்தி ஏடுகள் பாராட்டியுள்ளன.

இந்த பரிசோதனை சீனாவின் போராயுத முன்னேற்றத்துக்கு மேலும் உத்வேகத்தை அளித்துள்ளதாக சீனமக்கள் தினசரி செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் தலைவர் டெங் ஸியாவோபிங் இந்தப் பரிசோதனைக்குப் பொறுப்பான இராணுவ நிபுணர்கள் என்று கருதப்படும் 29 பேரைக் கௌரவித்துள்ளார்.

ஜியாங் ஷயோகுவா, பெய்ஜிங் பெங்ஆகிய இரு உயர் இராணுவ உத்தியோகத்தர்கள் '1ஆம்தர வீரர்கள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதக்கம் சூடப்பட்டனர். இவ்வாறு சீனமக்கள் தினசரி மேலும் தெரிவித்தது.

ஏவுகணைப் பரீட்சிப்பு பற்றி சீன கம்யூனிஸ்ட் கட்சி தகவல் வெளியீடு கருத்துத் தெரிவிக்கையில்:

இலக்குகளை ஊடுருவிச் செல்லக்கூடிய இதன் திறனாற்றலை சரியாக அவதானிக்கவே இது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறியது.

பரீட்சிக்கப்பட்ட திகதியோ மேலதிக தகவல்களோ தெரிவிக்கப்படவில்லையெனவும் அந்த வெளியீடுகள் தெரிவித்துள்ளன.



# அஸ்வமேத யாகம்

ஸ்ரீ மகா விஷ்ணுவின் அருளாசி வேண்டிச் செய்யப்படும் மிகப் பெரிய யாகங்களில் ஒன்று அஸ்வமேத யாகம்.

அஸ்வமேத யாகம் யாகங்கள் அனைத்திலும் சிறந்ததும் உன்னதமானதும் மகத்துவமானதுமாகும்.

மகா விஷ்ணுவின் பிரீதிக்கு மிக மிக ஏற்றது அஸ்வமேத யாகமாகும்.

மகான் ஒருவரின் தெய்வீக அருள் வாக்கை பக்தி சிரத்தையுடன் சிரமேற்கொண்டு இலங்கையில் முதன்முறையாக இந்த யாகம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த யாகத்தைச் செய்வதன் மூலம் மக்களுக்கிடையிலும் நாட்டிலும் உலகிலும் அமைதியும் சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட வழிபிறக்கும் என்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

தனிப்பட்டவர்களுக்கும் அவரவர்களுக்குள்ள குறைகள் நீங்கி தாம், தாம் வேண்டும் வரங்களைத் தருவதற்கு இந்த யாகம் வழிசெய்யுமென்று வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ மகா விஷ்ணுவின் முதற் தோற்றம் குதிரை வடிவில் அமைந்தது. "ஹயக்கிரீவராக" ஸ்ரீ மகா விஷ்ணு குதிரை முகத்துடன் அவதாரம் செய்தார்.

குதிரைகளில் நான் அமிர்தத்தோடு தோன்றிய "உச்சை ஸ்வரஸ்" அஸ்வமாக இருக்கிறேன் என்று மகா விஷ்ணு செப்பியுள்ளார்.

ஸ்ரீ மகா விஷ்ணுவின் பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரமும் வெண் குதிரைத் தோற்றத்தில் அமையும் என்று புராணங்கள் கூறுகின்றன.

கொழும்பு, பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோயில் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள யாக சாலையில் 27 - 12 - 85 முதல் இந்த அஸ்வமேத யாகம் நடைபெற்று வருகின்றது. இது தொடர்ந்து 48 தினங்களுக்கு நடைபெறும்.

நான்கு வேதங்களிலும் ஆகமங்களிலும் வேதக் கிரியைகளிலும் பாண்டித்தியமும் தேர்ச்சியும் பெற்றவர்களும் அதி உயர் தகைமை வாய்ந்தவர்களுமான பாரதத்தையும் இலங்கையையும் சேர்ந்த சைவ, வைஷ்ணவ சிவாச்சாரியார்கள் முறைப்படி ஏற்று நிறைவேற்றத் திருவருள்பாலித்திருக்கின்றது.

இலங்கையின் காவல் தெய்வமாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவை மூலவராக முன்னிறுத்தி நடக்கும் அஸ்வமேத யாகத்தில் கலந்து வேத பாராயண மந்திரங்களைக் கேட்டும், ஆகுதிப் பொருள்களை அன்பளிப்புச் செய்தும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் அனுக்கிரகத்தையும், அருளையும் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

**செல்லையா இராசதுரை**
78, கிறகறிஸ் அவன்யூ,
கொழும்பு — 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நான், எனது என்ற ஆணவ மூனைப்பு நீங்கி அன்பு, அருள் என்று ஆண்டவன் நினைப்பு எமக்கு வர வேண்டும். அப்போது தான் வாழ்வின் சுபீட்சத்தை நாம் அடையலாம்.
- ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22078

29-01-86 த. பெ. 23

# கையொப்ப இயக்கம்

வடக்கில், இராணுவ முகாம்களைச் சுற்றி உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்கள் ரத்துச் செய்யப்படும் அறிகுறியை இன்னும் காணோம்.

அவற்றை ரத்துச் செய்யும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிஞ்சிற்றேனும் இருப்பதாகத் தெரியவில்லை. தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அதனை நாளாந்தம் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் ஊர்ஜிதம் செய்து வருகிறார்.

பாதுகாப்பு வலயங்கள் இந்த மாதம் பதினாறும் திகதி பிரகடனப்படுத்தப்பட்டன. அன்றைய தினத்திலிருந்து ஐந்து நாட்களில் வடபகுதி மக்கள் தமது எதிர்ப்பை பகிரங்கமாகக் காட்டத் தொடங்கிவிட்டனர்.

இம்மாத நடுப்பகுதியில் ஊர்வலமாகவும், மறியல் போராட்டமாகவும் தொடங்கிய மக்கள் போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. ஊர்வலங்களும், மறியல் போராட்டங்களும் குடாநாட்டின் பட்டி தொட்டிகளுக்கு எல்லாம் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

வடபிரதேசத் தொழிலாளர்களின் பிரமாண்டமான எதிர்ப்பு ஊர்வலம் இன்று நடைபெறப்போகிறது. கூட்டுறவு ஊழியர் மற்றும் பலதரப்பினரும் கலந்துகொள்ளும் பிரமாண்டமான ஊர்வலமாக அது அமையப்போகிறது.

எந்தப் போராட்டமும் மக்கள் போராட்டமாக மாறுமல் கோரிக்கைகளைப் பெறுவதும், இலட்சியங்களை அடைவதும் மிகமிகக் கடினம். இந்த உண்மையைப் புரிந்துகொண்டு நகரத்துத் தொழிலாளரும், கிராமத்துப் பாட்டாளி மக்களும், உழவர் பெருமக்களும், வர்த்தகர்களும், அன்னையர்களும் என்று சகல தர மக்களும் இந்தப் போராட்டத்தில் குதித்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது.

எனினும் முன்னர் ஒரு தடவை இப்பத்தியில் குறிப்பிட்டதுபோல, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உத்வேகம் போராட்டத்தில் இல்லாதிருப்பதை மீண்டும் இங்கு சுட்டிக் காட்டியே ஆகவேண்டி உள்ளது.

ஊர்வலம், மறியல் என இரு முனைகளாக நடக்கும் இந்த மக்கள் போராட்டத்தை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமல் இருக்கிறது. அதற்கு, வேறு அர்த்தம் வியாக்கியானம் என்பனவற்றைக் கொடுக்கவும் அமைச்சர் லலித் படாதபாடு படுகிறார். அதனால் நாம் மனம் சோர்ந்து விடலாகாது இன்று இல்லாவிடிலும் என்றோ ஒருநாள் மக்கள் சக்தியை அமைச்சரும், அரசாங்கத்தினரும் உணராமல் விடமாட்டார்கள்.

இந்த இருமுனைப் போராட்டத்தோடு மூன்றுவது அங்கம் ஒன்றையும் சேர்க்க பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு முடிவு செய்திருக்கிறது. பாதுகாப்பு வலயங்களை ரத்துச் செய்தல், தமிழ்ப் பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கையொப்ப இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதே அதுவாகும்.

மறியல், ஊர்வலம் என்பவற்றைப் போலவே கையொப்பப் போராட்டமும் சக்தி மிக்கது. இங்கு நடப்பவற்றைப் பொது மக்களே வெளிநாடுகளுக்கு நேரடியாக எடுத்துக் கூறுவதற்கு அதன்மூலம் வாய்ப்பு உண்டாகும். அரசாங்கம் செய்யும் பொய்ப் பிரசாரங்களை தமிழ் மக்களே நேரில் முறியடிப்பதாகவும் அமையும்.

இங்கு நடக்கும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும் எழுத்தில் வடித்து அதனை லட்சக் கணக்கான மக்கள் ஊர்ஜிதம் செய்து கையொப்பம் இடவேண்டும். அந்த அறிக்கையை நாட்டில் உள்ள சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் இயன்றவரை நேரில் கையளிப்பது அவசியம். சர்வதேச நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கவேண்டும்.

இலங்கையில் நடக்கும் சம்பவங்களை வெளி உலகம் சரியாக அறிந்துகொள்ள இது வசதியளிக்கும்.

அதன்மூலம் நல்ல விளைவுகளைப் பெற முடியும். எனவே மக்கள் எல்லோரும் கையொப்ப இயக்கத்துக்கும் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்கின்றோம்.

## பாலம் தகர்ப்பு

கிளிநொச்சி, ஜன. 29
கிளிநொச்சி உருத்திரபுரம் 6-ம் வாய்க்கால் பகுதியில் உள்ள மதகு ஒன்று இனந் தெரியாதவர்களால் நேற்று அதிகாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

பாலம் பலத்த சேதத்திற்குள்ளாகியதால் வாகனப் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்பால் நகர் அதிர்ந்தது. மக்கள் ஏதோ என்னவோ என்று பயந்து அதிகாலையிலேயே கண் விழித்தனர்.

★ போராளிகள்

# வன்செயலை கைவிட்டால்

# படைகளை நிராயுதபாணியாக்குவேன்

## 'இந்து' பேட்டியில் ஜனாதிபதி உறுதி

மாவட்ட, மாகாண சபைத் தேர்தல்களை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது.

ஒரே தருணத்தில் நேரடியாக அந்த தேர்தல்களை நடத்தவும் அரசு தயாராக உள்ளது.

தேர்தலில் கூடுதல் ஆசனங்களுடன் வரும் அரசியல் கட்சியின் தலைவரை அழைத்து அந்த மாகாண சபையின் முதலமைச்சர் பதவியை நான் வழங்குவேன்.

இலங்கையின் ஒற்றை ஆட்சித் திட்டத்தின் கீழ் அந்த முதலமைச்சருக்கு வழங்கப்படவேண்டிய நிறைவேற்று அதிகாரங்கள் வழங்குவது குறித்து அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே குறிப்பிடத்தக்க இடைவெளி இருக்கிறது.

சட்டம், ஒழுங்கு பராமரிப்பு, காணிக்குடியேற்றம் ஆகியன குறித்தும் குறிப்பிடத்தக்க இடைவெளி உண்டு.

இது சம்பந்தமான பேச்சுக்கள் தொடர்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகள் பற்றி அரசாங்கம் ஒருவிஷயத்தைத் தெளிவுபடுத்தி விட்டது.

வடக்கு-கிழக்கு இணைப்பை அங்கீகரிக்க முடியாது என்று அரசு கூறிவிட்டது. இணைப்புக்கு கிழக்கு மாகாணம் மறுத்து விட்டதே!

பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்க முடியாது. தீவு எல்லாருக்கும் சொந்தம். நாடு தழுவிய ரீதியில் அவர்கள் கேட்டால் நான் எதையும் செய்வேன்.

பிரிவினையை எதிர்த்து அரசமைப்புச் சட்டத்துக்கு விசுவாசம் தெரிவிக்கும் 6வது திருத்தம் பற்றி திறந்த மனத்துடன் நான் இருக்கிறேன்.

ஈழம் கோரிக்கையை கூட்டணி கைவிடாமல் நாடாளுமன்றத்தில் கலந்து கொள்ளுவது பற்றி ஆராய உள்ளேன்.

> இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 'இந்து' ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியின் இறுதிபகுதி இன்று பிரசுரமாகிறது.
>
> பேட்டிகண்டவர்:- 'இந்து' இணையாசிரியர் திரு. என். ராம்.

ஆயுதங்களைக் கைவிட்டு அகிம்சை வழியைப்பிடிப்போம் என்று உத்தரவாதம் தந்தால் போராளிகளை இந்தியாவில். இந்திய அரசின் அனுமதியுடன் சந்தித்துப் பேச நான் தயார்.

இந்தியாவிலும் இலங்கையிலும் அமைதி நிலவ வேண்டுமானால், வன்செயல் கைவிடப்பட வேண்டும்.

அதைச் செய்யுங்கள். ஆயுதப்படையினரை முகாம்களுக்குள் வைத்துக் கொள்வேன் ஆயுதப்படையினரை நிராயுதபாணியாக்குவேன்.

அவசரகாலச் சட்டத்தை வாபஸ் செய்துவிடுவேன்.

வன்செயலைக் கைவிட்டால் எதுவும் செய்ய முடியும்.

முகாம்களை மூடி ஆயுதங்களைக் கீழே போட்டு ஜனநாயக வாழ்க்கையை தீவிரவாதிகள் தொடங்கட்டும், அவர்களுக்கு மன்னிப்பு- அதுவும் நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்குவேன்.

### பொய்யாமொழி



குறள்:
எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

பொருள்:
பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியினும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா.

★ சங்கானை மக்கள் வங்கியில்

# கொள்ளை போன நகை

## அடுத்த வாரம் முதல் நஷ்டஈடு

யாழ்ப்பாணம், ஜன. 29
மக்கள் வங்கி சங்கானைக் கிளையில் கொள்ளையிடப்பட்ட நகைகளுக்கான நட்ட ஈட்டுப் பணம் பெப்ரவரி முதலாம் வாரத்தில் இருந்து உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுவதாக மக்கள்வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் உதயனிடம் தெரிவித்தார்.

சுமார் 3,000 வாடிக்கையாளர்களுக்கு உரிய நகைகள் சங்கானை வங்கியிலிருந்து கொள்ளையிடப்பட்டன.

அவற்றின் பெறுமதி சுமார் ஒன்றரைக் கோடி ரூபா இருக்கும்.

நட்டப்பணம் பெறுவது சம்பந்தமான கடிதங்கள் நேற்றுத்தொடக்கம் வாடிக்கையாளர்களுக்கு மக்கள் வங்கி நிர்வாகத்தினால் அனுப்பப்பட்டு வருகின்றன.

இக்கடிதங்களைக் கொண்டுபோய் மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையில் ஒப்படைத்தால், அங்குள்ள அதிகாரிகள் நட்டஈட்டுத் தொகையைக் கணக்கிட்டு, அதை அத்தாட்சிப்படுத்தும்கடிதம் ஒன்றை வாடிக்கையாளருக்குக் கொடுப்பர்.

சுன்னாகம் கிளை வழங்கும் கடிதத்தை கோட்டைக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் ஒப்படைத்தவுடன் நட்டஈட்டுப் பணம் கிடைக்கும்.

பெப்ரவரி 3ஆம் திகதியில் இருந்து சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளை நிர்வாகம் நட்டஈட்டுப் பணத்தைக் கணக்கிட்டு கடிதம் வழங்கத் தொடங்கும்.

ஒரு பவுணுக்கு 2,800 ரூபா வீதம் நட்டஈட்டுப் பணம் வழங்கப்படும்.

இத்தகவல்களை மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் திரு. கணேசசுந்தரமே தொலைபேசி மூலம் உதயனிடம் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு சிறைச்சாலை வாகனம் கடத்தல்

மட்டக்களப்பு, ஜன. 29
மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சொந்தமான வாகனம் திங்களன்று காலை கடத்தப்பட்டது.

பாலமுனைச் சந்தியில் வைத்து இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றது.

இது பற்றிய விவரம் வருமாறு;-

சிறைச்சாலை வாகனத்தில் கொலை வழக்குச் சம்பந்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்பு ஒன்றுக்கு நீதி மன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது இச்சம்பவம் நடந்தது. அத்தருணம் 4 சிறைச்சாலை ஊழியரும் வாகனத்தில் இருந்தனர்.

இனந்தெரியாத நபர்கள் வாகனத்தை வழிமறித்தனர். சிறைச்சாலை ஊழியரையும் கைதிகளையும் இறக்கிவிட்டு வாகனத்தைக் கடத்திச் சென்றனர்.

இது பற்றி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்நகர் பாதுகாப்பு வலயம்

# வட மாகாண அதிபர் சங்கம் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஜன. 29
யாழ்ப்பாண நகரத்தின் கேந்திரப்பகுதிகள் பாதுகாப்புவலயத்தினுள் அடக்கப் பட்டுள்ளதையிட்டு வடமாகாண அதிபர் சங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இவ்வலயத்தினுள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம் போன்ற முக்கிய பாடசாலைகள் உட்பட்டுள்ளதால் பத்தாயிரத்துக்கும் அதிகமான மாணவர்களினதும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களினதும் நிலையையிட்டு அதிபர் சங்கம் கவலை கொண்டுள்ளது.

இப்பாடசாலைகளை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல் இயலாத காரியமாகும். இதனால் பாதுகாப்பு வலயத்தினுள் இப்பகுதியைக் கொண்டு வருவதைக் கைவிட வேண்டுமெனக் கோரும் தீர்மானம் [illegible] வடமாகாண அதிபர் சங்கத்தின் நிர்வாகசபை நிறைவேற்றி உள்ளது.

அதன் தலைவரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபருமான திரு. க. அருணாசலம் தலைமையில் நிர்வாகசபை வேம்படி மகளிர் கல்லூரியில் கூடியபோது தீர்மானம் நிறைவேற்றியது.

இதன் பிரதிகள் ஜனாதிபதி, கல்வி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், வடபகுதி இணைப்பதிகாரி, வடமாநிலக்கல்வி அதிபதி, யாழ் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## வவுனியா பிரஜைகள் குழு

யாழ்ப்பாணம், ஜன 29
வவுனியா பிரஜைகள் குழுவின் நடப்பாண்டு செயலவை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்:--

தலைவர் என். எம். எக்ஸ். சொர்ணபாலா, உபதலைவர்கள்: அல்ஹாஜ் பி எஸ். அப்துல்லா, வண. பிதா. பி. யேசுராஜா, செயலாளர்: வி. சுப்பிரமணியம், பொருளாளர்: ஈ. அந்தோனிப்பிள்ளை, செயலவை உறுப்பினர்கள்:- வி தம்பிராசா ஏ. எஸ். ஜோக்கிம் பி. சந்தியாகு, வண. பிதா. ஈ ஜே. ஈசையா,

நிர்வாகச் செயலர்: எம். சுவாம்பிள்ளை.

## சமய சந்நிதிகளில்

### கரவெட்டியில் வசந்த மண்டபம்

கரவெட்டி, ஜன. 29
கரவெட்டி சிந்தாமணி விநாயகர் கோயிலில் இரண்டாம் வீதியில் ஒரு வசந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

கோயிலின் கோபுரத்திற்கு முன்பு பெரும் மண்டபம் பூர்த்தியாகவுள்ள இவ்வேளையில் வசந்த மண்டபம் கட்டப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

### சண்டேஸ்வரர் குருபூஜை

நாளை சண்டேஸ்வரர் குருபூஜை. இதனையொட்டி இங்கு இந்தப் பாடல் பிரசுரமாகின்றது.

சிந்தையிற் சிவனையே சிந்திக்கும் சிறப்புடையார்
சில பசுவை மேய்க்கவே சிறு கோலோச்சியே
முந்தைய ஊழ்வினை உந்தியே தள்ளவே
ஒளித்தங்கு வந்துயர் பூஜையைக் குழப்பிய
தந்தையின் காலையே தறித்த சணடேஸ்வரர்
தம்மடி போற்றியே தலைமிசை ஏத்துவோம்
எந்தையே! எம்முடை யீசனே! என்று நாம்
ஏத்தியே துதிப்போமே எங்களிறைவனையே!

உறுதி கொண்டங்கே உண்மையாய்க் கும்பிட்ட
உள்ளத்தை உடையவர் உயர் சண்டேஸ்வரர்
இறுதியாய்க் கும்பிட்டு நம் இருகரம் தட்டியே
இன்னருள் புரிவீரென்றி யம்பியே
பணிந்தோம்
பொறுதியாய்ப் புகன்று நம் குறைகளைப் போக்கவே
புண்ணியா உன்னடி போற்றியே!போற்றியே!
அறுதியாய்க் கூறினோம் அருளையே நல்குவீர்
அடிமலர் பணிந்தோம் ஐயனே அருள் தாரீர்!

— இளஞ்சைவப் புலவர்
இ. ஸ்ரீதரன்

# வடக்கு கிழக்கை பிரிக்க விடமாட்டோம்

## கிழக்கு கூட்டணி பிரமுகர் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 29
தமிழ் மொழி மாநிலம் வடக்கு—கிழக்கு மாகாணங்கள் இணைந்ததாக இருக்கவேண்டும். இதில் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளார்கள்; விட்டுக் கொடுக்க மாட்டார்கள். இரண்டையும் பிரிக்க விடமாட்டார்கள்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் திரு. ஆ. வேல்முருகு இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது பற்றிய விஷயத்தில் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கூட்டணித் தலைமைப் பீடத்திடம் எடுத்துரைப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று கூட்டணிப் பிரமுகர்கள் தமிழகம் செல்கின்றனர்.

அவர்களில் திரு. வேல்முருகுவும் ஒருவர்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. அ. சம்பந்தமூர்த்தி, சபை முன்னாள் உறுப்பினர் திரு. அல்பர்ட் சீவரத்தினம் ஆகியோர் மற்ற இருவர்.

தமிழகம் செல்வதற்காக கொழும்பு புறப்படும் முன்னர், திரு வேல்முருகு கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பிரமுகர்களைக் கிராமங்களுக்குச்சென்று சந்தித்தார். அவர்களின் அபிப்பிராயங்களையும் அவர் பெற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் கருத்துக்களை தமிழ்த் தலைவர்களிடம் எடுத்துரைப்பேன்.

வடக்கு — கிழக்கு இணைப்பு விஷயத்தில் கிழக்குத் தமிழர்கள் உறுதியாக உள்ளனர் என்பதை அவர்களுக்குத் தெரிவிப்பேன்.

இப்படி திரு. வேல்முருகு சொன்னார்.

## வித்தாரம்

முரளியாரே வாரும்! காலங்காத்தாலை முழிச்ச உடனை உம்மைத்தானே சந்திக்க வேண்டியதாய்ப் போச்சு. என்ன, எப்பிடி? சுகமாக இருக்கிறீரோ!

உவர் ஜே. ஆர்.. முந்தின பிரதம மந்திரி சிறிமாவுக்குக் குடியுரிமையைக் குடுத்தாலும் குடுத்தார், இப்ப அவர் பாடு திண்டாட்டமாய்ப் போய்ச்சு.

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை குடுக்கிற விஷயத்திலை எதிரும், புதிருமா இருக்கினம். குடியுரிமை குடுக்கிறதை எதிர்த்துப் பிரசாரம் செய்ய அம்மையார் எப்பவே தொடங்கி விட்டா, அவவுக்குச் "சப்போட்டா" பேசிறதுக்கு அஸ்கிரிய பீடாதிபதியும் துணையாய் இருக்கிறார்.

ஆனா ஒண்டு, மல்வத்தை மகாநாயக்கா அரசாங்கத்தின்ரை பக்கம். அவருக்குத் தானும் பர்ணசாலைகள்பிக்குமார்எல்லாம் அதிகம் அவருக்கு மொத்தம் 15,000 பிக்குகள் இருக்கினம் எண்டு உத்தேசமாய் மதிப்பிட்டிருக்கினம்.

அடுத்த அஸ்கிரியவுக்கு ஆக 9,000 பிக்குமார் தான் இருக்கினமாம்.

அதனாலை தன்னை இந்தக் குடியுரிமை விஷயத்திலை அசைக்கேலாது எண்டும், ஆரும் கிட்ட நெருங்கேலாது எண்டும் ஜனாதிபதியார் தன்னம்பிக்கையுடன் இருக்கிறாராம்.

பாத்தியா விஷயத்தை இந்த நாட்டிலை சிங்கள; அரசியல் வாதியள் செய்யிற முடிவுகளை பிக்குமார் ஆதரிச்சாத்தான் அதுகள் செயலுருவம் பெறலாம் எண்ட நிலைமை இருக்கு.

இந்த நிலை இண்டைக்கு நேற்றைக்கு வந்ததில்லை. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா காலம் தொடக்கம் இருக்குதப்பா. யு. என். பியைத் தோற்கடிச்சுக் கொண்டு பண்டா பதவிக்கு வாறதுக்கு இரண்டு மகாநாயக்காமாற்றை சுமார் 25 ஆயிரம் பிக்குமார் ஆதரிச்சவையாம்.

* * *

கிளிநொச்சி ரயில் நிலையத்திலை சனிக்கிழமை நடந்த பயங்கரத்தைப் பேப்பரிலை பார்த்திருப்பாய்.

ரயிலுக்கு நிண்ட பயணிகளைச் சுட்டவையளை ஏதோ விசாரிக்கப் போகினமாம். அவையும் அவையின்ரை விசாரணையும்!

லெப்டினட் ஒருவர் வந்து கட்டுப்படுத்தப் பார்த்தும் 'அவை' யின்ரை வெறி அடங்கவில்லையாம்.

செத்தவையிலை அதிகமானவை மலையகத் தமிழர்கள். சின்னப்பிள்ளையும் செத்திருக்கு.

இதுக்கிடையிலை இன்னொரு விஷயம் தெரியுமே.

போன வெள்ளிக்கிழமை கிளிநொச்சி முகாமிலிருந்து தென்பகுதிக்கு இடமாற்றமாய்ப் போன சிப்பாய்கள், ரயில் நிலையத்திலை நிண்டவையைப் பாத்து இப்பிடிச் சொல்லிச்சினமாம் :

"நீங்கள் இனி அழாதீர்கள்; நாங்களும் அழாமல் போகிறோம்" எண்டு!

கோண்டாவிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88 Aug. A/L வகுப்புகள்
11.30–Chemistry: திரு. தில்லைநாதன்
12.30–Physics: திரு. வர்ணம்
1 30–Botany: திரு. குகாதரன்
2 30–Zoology திரு. நாகநாதன்
1.30–3.30–Maths: திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, JAFFNA.

உதயன்

29 01-1986

88 AUG.
A/L வகுப்புக்கள்
ஆரம்பம்: 01 – 02 – 86
விபரங்கட்கு;
New Master Institute
BMC Lane JAFFNA-

# தமிழருக்கு எதிரான வன்முறை குறித்து இந்தியா கவலை

## தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதி ஜே. ஆர். சந்திப்பு

புதுடில்லி, ஜன. 29

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் மீது நடத்தப்படும் வன்முறைகள் குறித்து இந்தியா தனது கவலையை இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளது.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற் இந்த விடயத்தில் இந்தியா கொண்டுள்ள கவலையையும் கருத்தையும் இலங்கை அரசிடம் எடுத்துரைத்தார்.

இந்திய அரசின் பணிப்பின் பேரில் கடந்த திங்கட்கிழமை மாலை தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்து இது பற்றி பேச்சு நடத்தினார்.

"இலங்கையில் நடக்கும் தமிழ் மக்களுக்கெதிரான வன்முறைகள் நிலைமையை மேலும் சிக்கலாக்கும். அதுமட்டுமல்லாமல் சாதாரண குடிமக்களுக்கு மேலும் மோசமான துன்பங்களையே இது உண்டாக்கும் என்று இந்திய அரசு கருதுவதாகத் திரு. டிக்ஸிற் எடுத்துச் சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளுக்குக் கொழும்பில் அரசு வட்டாரங்களில் ஏற்படக் கூடிய எதிர்த்தாக்கங்கள் என்ன என்பது விரைவில் கண்டு கொள்ளப்படும் என திரு. ஜெயவர்த்தன திரு டிக்ஸிற்றி தெரிவித்தார்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக திரு பண்டாரியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்றும் திரு. ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி ரயில் நிலையத்தில் வைத்துச் சாதாரண அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாகவும் திரு. ஜெயவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

கொல்லப்பட்ட தமிழர்களில் கூடுதலானவர்கள் இந்திய வம்சாவழி மக்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் முடிவில் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி இந்தியத் தூதுவருக்கு உறுதியளித்துள்ளதாகப் புதுடில்லிக்குக் கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.



## உயிருக்கு ஊசலாடிய தாயும் மரணமானார்

நல்லூர், ஜன, 29

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி ரயில் நிலையத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த நல்லையா நாகேஸ்வரி என்ற பெண்மணி (வயது 30) நேற்று யாழ் வைத்தியசாலையில் மரணமானார்.

இவரது சடலம் யாழ் வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது மகன் கடந்த சனிக்கிழமை ரயில் நிலையத்தில் மரணமானதும் கணவரும், மற்றைய மகனும் படுகாயங்களுடன் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

யாழ் ஆஸ்பத்திரியில் இந்தப் பெண் உயிருக்காக ஊசலாடிக் கொண்டிருந்த வேளையில் எடுக்கப்பட்ட படமும்—

படுகாயமடைந்த அவரது கணவன், சிறு குழந்தை ஆகியோரினது படங்களும் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்ததும் தெரிந்ததே.

## கடத்தப்பட்ட அதிகாரி விடுவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்புப் பகுதியில் இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் வைத்திய அதிகாரி ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

நேற்றுமுதல் மீண்டும் ஆஸ்பத்திரியில் அவர் கடமைபுரியத் தொடங்கினார்.

சனிக்கிழமை முதல் இரண்டு தினங்கள் இவரைக் காண முடியாதிருந்தது.

இருதயபுரம் கொலைகள் தொடர்பாகவே இவர் கடத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## இனத்தைக் காக்க இரத்தம் கொடுங்கள்

நல்லூர், ஜன. 29

யாழ் – ஆஸ்பத்திரிக்கு உடனடியாகச் சென்று உயிருக்காகப் போராடும் எமது இனத்துக்கு உயிர் கொடுங்கள்.

இதற்கு நீங்கள் செய்யக் கூடியது உடனடியாக யாழ். வைத்தியசாலை இரத்த வங்கிக்குச் சென்று உங்களால் இயன்றளவு இரத்தத்தை வழங்குவதான்.

இதன் மூலம் எமது இனத்தை நாம் காப்பாற்ற வழி செய்யலாம்.

இவ்வாறு ஆஸ்பத்திரி உயர் அதிகாரி ஒருவர் நேற்று உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ். இரத்த வங்கியில் இரத்தத்திற்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வங்கிப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## ஒரு குடும்பத்தின்----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரஜைகள் குழுவுக்குப் புகார் செய்திருக்கிறார்.

எனது தகப்பனார் தம்பு சின்னத்தம்பி பளைப்பகுதியில் வசித்து வந்தார். அவருக்கு ஆறு பிள்ளைகள். ஐந்து ஆண் நான் ஒரு மகள்.

மூத்த சகோதரர் கிருஷ்ண ஆனந்தம் குளிக்கச் சென்றபோது குளத்தில் மூழ்கி மரணமானார். இரண்டாவது சகோதரர் யோகானந்தன் காதல் விவகாரம் ஒன்றினால் நஞ்சு மருந்து குடித்துத் தற்கொலை செய்தவர். மூன்றாவது சகோதரர் ஜெயானந்தம் என்பவரும் தற்கொலை செய்து கொண்டார். நான்காவது சகோதரர் விவேகானந்தன் பளையில் லொறி ஒன்று மோதி விபத்து மரணம் அடைந்தார்.

இந்த மரணங்கள் நான்கும் அடுத்தடுத்து எமது குடும்பத்தில் நிகழ்ந்தன. இதனால் எமது குடும்ப வாழ்க்கையே ஒரு சோகமயமாகியது தாயாரும் இச் சம்பவங்களினால் சுயநினைவிழந்து வீட்டில் நிரந்தர நோயாளியானார்.

இறுதியில் இவற்றிற்கெல்லாம் ஆறுதல் கொடுத்து குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தவர் ஐந்தாவது தம்பி முருகானந்தம்.

இவர் கடந்த வருடம் ஒரு நாள் வீடு கட்டுவதற்காக இணுவிலுக்குச் சென்று சாமான்கள் வாங்கி வருவதாகவும் அத்தோடு பூநகரியிலுள்ள வயலுக்குச் சென்று சூடு அடித்து நெல் எடுத்து வருவதாகவும் கூறி இணுவிலுக்குச் சென்றார்.

இணுவிலுக்குச் சென்றவர் சில நாட்களா வீடு திரும்பவில்லை. இணுவில், பூநகரி ஆகிய இடங்களுக்குச் சென்று விசாரித்தோம். அங்கும் அவர் இல்லை. பின்னர் பல இடங்களிலும் தேடி அலைந்தோம். இறுதியில் சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து ஒரு நண்பர் மூலம் எனது தம்பி கோட்டை இராணுவ முகாமில் ராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டதாக அறிந்து கோட்டைக்குச் சென்று பார்த்தோம். அவர் அங்கு இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். இதேசமயம் இவரைக் காணவில்லை என்று ஏக்கத்தில் இருந்த தகப்பனார் இவரை இராணுவம் பிடித்து வைத்திருப்பதாக அறிந்து ஏக்கத்தில் மரணமானார். தகப்பனார் இறந்தது கூட எனது தம்பிக்குத் தெரியாது.

எமது குடும்பத்தை நிர்வகித்து ஏனையவர்களைக் கவனிக்க வேண்டிய எனது தம்பியை உடன் மீட்டுத் தாருங்கள். இப்படிக் கண்ணீர் மல்கிய நிலையில் எடுத்துரைத்தார். இது [illegible] பிரஜைகள் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## நகர சுத்தி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கில் றெயிலர் பெட்டி கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது.

ஏற்கனவே 6 டிராக்டர்கள் இப்படிக் கடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

டிராக்டர் கடத்தல்களால் யாழ். மாநகர சபைக்கு 20 லட்சம்ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறிய ஆணையாளர்,

வரியிறுப்பாளரின் நலன் கருதியும் யாழ். ஆஸ்பத்திரி பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் கடத்தப்பட்ட டிராக்டர்கள் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இது விஷயத்தில் இயக்க இளைஞர்களின் உதவியையும் யாழ் மாநகர ஆணையாளர் நாடியுள்ளார்.

## சீனி, மா...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. எம். பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை மா போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

கடந்த ஒரு வாரகாலமாக எரிபொருள் பெர்மிட் எதுவும் வழங்கப்படவில்லை. எனினும் இரண்டு வாரங்களுக்குத் தேவையான கையிருப்பு மொத்த வியாபாரிகளிடம் இருப்பதாக [illegible] தக வட்டாரங்கள் தெரிவித்தன.

"மீண்டும்"

எமது புதிய ORIGINAL வெளியீடுகள்

* ஜெயசங்கர் — மாதவி
ஆண்டவன் சொத்து
(THOMSUN ORIGINAL)

* சிவகுமார் — நளினி
மீண்டும் பராசக்தி
(THOMSUN ORIGINAL)


* விஜயகாந்த் — நளினி
ஈட்டி
(THOMSUN ORIGINAL)

* மோகன் — நளினி
டிசெம்பர் பூக்கள்
(PYRAMID MASTER)

* ஜெயசங்கர் — K. R. விஜயா
சமயபுரத்தாளே சாட்சி
(V. G P. MASTER)

உங்கள் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 32665.



யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற "உலக சமய தின" விழாவை அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் துணைவாரி உறுப்பினர் திரு. செ. சுவர்ணராஜ் அருகில் நிற்பதையும் முதலாவதுல் படத்தில் காணலாம். யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையுரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

## திடீரென நுழைந்து இராணுவம் தேடுதல்

கிளிநொச்சி, ஜன. 28

உருத்திரபுரம், கிளிநொச்சி, ஜெயந்தி நகர், திருநகர்ப் பகுதிகள் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினரால் சுற்றி வளைத்து சோதனை இடப்பட்டன.

கவச வாகனங்கள், உழவுஇயந்திரம், கிறேன் சகிதம் நடைபவனியாக மேற்படி இடங்களுக்குச் சென்ற இராணுவம் போராளிகள் மேற்படி பகுதிகளில் இருப்பதாகக் கூறி சோதனையிட்டது.

இச் சோதனையின் போது கவசவாகனங்களும் ஒரு சில இராணுவத்தினரும் வீதிகளால் வர, பல இராணுவத்தினர் வளவுகளூடாகவும் வயல்வெளிகள், தோட்டங்கள் ஊடாகவும் சென்று மக்கள் எதிர்பாராத விதமாக வீடுகளில் நுழைந்து சோதனை இட்டது.

சோதனை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை நீடித்தது. துப்பாக்கி வேட்டுக்கள் உருத்திரபுரம் பகுதியில் தீர்க்கப்பட்டன. இதனால் பொது மக்கள் வீடுகளில் அடங்கினர். அவ்வேளை வீட்டுள் நுழைந்து சோதனை நடத்தினர்.

தேடுதலின் போது இராணுவத்தைக் கண்டு ஓடியதாக கூறப்படும் நான்கு இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர்.

## பிரச்சனைக்கு....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காணவேண்டிப் பிரார்த்திக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக்கொள்ள இருக்கிறது.

அரசாங்க தனியார் துறை ஊழியர்கள், கூட்டுறவு ஊழியர்கள், அத்தியாவசியசேவை ஊழியர்கள் உட்பட எவரும் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது.

பொதுமக்கள் எந்த அத்தியாவசிய தேவைகளுக்கும் முன்கூட்டியே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அதற்கு வசதியாகப் போராட்டத் திகதிபற்றி முன்னரே அறிவிக்கப்படுமென குழுப்பிரமுகர் ஒருவர் தகவல் தந்தார்.

பொதுமக்கள் அனைவரும் உயர்வு, தாழ்வு வேறுபாடின்றி வீட்டினுள் இருந்து ஒத்துழைப்புத்தரும்படி கேட்கப்படுவார்கள்.

## லலித்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பாதுகாப்பு அமைச்சில் தன்னைச் சந்திக்கும்படி அன்னையர் முன்னணிக்கு, அமைச்சர் லலித் அத்துலத்முதலி அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த அழைப்பு, யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஊடாக, அன்னையர் முன்னணியிடம் கையளிக்கப்பட்டது.

அமைச்சரின் அழைப்பு சம்பந்தமான அரசாங்க அதிபரின் கடிதமும், அதற்கு அன்னையர் முன்னணி அளித்த பதிலும் வருமாறு,

### அரச அதிபர் கடிதம்

28-1-1986

இணைப்புச் செயலாளர்கள், அன்னையர் முன்னணி.

அம்மணி,

**1000 மீட்டர் பாதுகாப்பு வலயம்**

தாங்கள் என்னிடம் அதிஉத்தம ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கட்கு விலாசமிட்டு 1986-01-22ஆம் திகதி கையளித்த மகஜர் சம்பந்தமாக, கௌரவ தேசிய பாதுகாப்பு அமைச்சர் தங்களை, எதிர்வரும் சனிக்கிழமை 1986ஆம் ஆண்டு பெப்ருவரி முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு பாதுகாப்பு அமைச்சில் சந்திக்கும்படி கேட்டுள்ளார்.

தாங்கள் [illegible] தங்கள் [illegible] கொண்டு வரும் [illegible] தங்கள் சம்மதத்தையும் பிரயாணம் செய்யும் திகதியையும் அறியத்தருக.

தங்கள் விசுவாசமுள்ள
வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும்
அரசாங்க அதிபரும்.

### அன்னையர் முன்னணி பதில்

28-1-1986

மாவட்டச் செயலாளரும்
அரசாங்க அதிபரும்,
யாழ்ப்பாணம்.

ஐயா,

**1000 மீட்டர் பாதுகாப்பு வலயம்**

தங்கள் 28-1-1986 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது.

இன்று மலையகத்தில் எங்கள் சகோதர சகோதரிகள்மேல் நடத்தப்படும் வன்செயல்களைப் பார்க்கும்போது,

இந்நிலையில் அன்னையர்களாகிய நாங்கள் தேசியபாதுகாப்பு அமைச்சரை, அவர் அழைப்பினை ஏற்றுச் சந்தித்துப் பேசுவதில் பயன் உண்டா என்னும் ஐயமும், அச்சமும் மேலோங்கி நிற்கின்றன.

ஆகவே அமைச்சரைச் சந்திப்பது அவசியம் இல்லை என்று எங்கள் செயற் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இதனைத் தங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

தங்கள் உண்மையுள்ள
நிர்மலா பாலரத்தினம்
கணேஸ் பாலசிங்கம்
இணைச்செயலாளர்கள்,
அன்னையர் முன்னணி.

## மலையகத்தில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன. அதன் பின்னர் கார்கள் தாக்கப்பட்டன. அதில் காயமுற்ற பத்து பேர் லிண்டுல, கொட்டகலை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இ. போ. ச. வுக்குச் சொந்தமான 7பஸ்களும் 2 அரச வாகனங்களும் முற்றாக எரிக்கப்பட்டன.

அதேவேளை தலவாக்கலையில் தமிழர் ஒருவர் உயிரோடு எரிக்கப்பட்டார். அவர் இப்போது ஆபத்தான நிலையில் நுவரெலியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வன்செயல்களை ஆட்சேபிக்கும் விதத்தில் மேலும்பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர். லிண்டுல கோட்டக்கலப் பகுதித் தொழிலாளரும் நேற்று வேலை நிறுத்தத்தில் சேர்ந்துகொண்டனர்.

நுவரெலியா மாவட்டத்தின்பலபகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

பொலிஸ் விசேஷ பிரிவும், இராணுவமும் சேவைக்கு அழைக்கப்பட்டன. நிலைமையை நேரில் கண்காணிக்க இராணுவ உயர்அதிகாரி ஒருவரும், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஒருவரும் அனுப்பப்பட்டுள்ளனர்.

கொழும்பு - பதுளை ரயில் சேவையும் நேற்று ரத்துச்செய்யப்பட்டது.

நேற்றுக்காலை தலவாக்கலைப் பகுதியில் மலையகத் தமிழர்மீது தாக்குதல் நடத்தியகும்பலைக் கலைக்க பொலிஸார் வானத்தை நோக்கிச் சுட்டனர். அப்போது ஒருவர்கொலையுண்டார். 4பேர் காயமடைந்தார்கள்.

நுவரெலியா மாவட்டத்தின் ஒன்பது பிரதேசங்களில் ஊரடங்கு அமுலுக்கு வந்தது.

நேற்று இரவு 7 மணிக்கு அமுலுக்குவந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 10 மணியுடன் நீக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள 9 பிரதேசங்கள் வருமாறு:

மஸ்கெலியா, பொகவந்தலாவை, நோர்வூட், ஹட்டன், பத்தனை, தலமாக்கலை, லிண்டுல, அக்கரப்பத்தனை, நானுஓயா.

முப்படைகளின்இணைப்புத் தளபதி சிரில் ரணதுங்க நேற்று ஹெலிக்கொப்டர் மூலம் மலையகத்தின் முக்கிய இடங்களுக்குச்சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒழுங்குசெய்தார்.

ஊரடங்கு உத்தரவை மீறுபவர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் விடுத்த ஒரு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## யாழ். நகரில்:.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களையும் உரிமையாளர்களையும் கலந்து கொள்ளும்படி யாழ் வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. எஸ். வி. முருகேசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரை நாள் கடையடைப்பு நடத்தி ஹர்த்தால் நடத்தும்படியும் வேண்டுகோளில் கோரப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள 32 வெகுஜன ஸ்தாபனங்கள், விழிப்பு மன்றம் ஆகியனவும் ஊர்வலத்தில் பங்குபற்றுகின்றன. இது சம்பந்தமான ஏற்பாடுகளை மானிப்பாய் பிரதேச விழிப்பு மன்றம் செய்துளளது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சகல மக்களையும் பங்கு கொள்ளும் படி அரசாங்க லிகிதர் சேவையாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. குணசேன மகாநம விடுத்துள்ளஇவ்வேண்டுகோள் வருமாறு;

ஐ. தே. க. அரசு பதவிக்கு வந்தபின் தமிழ் மக்களையும் தொழிலாளர்களையும் சாதாரண உழைக்கும் மக்களையும் படிப்படியாக நசுக்கி வருவது தெரிந்ததே.

இந்தத் தொடர்ச்சியின் ஒரு முக்கிய கட்டமாக இராணுவ முகாம்களைச் சுற்றி 1000 மீட்டர் பாதுகாப்பு வலயம் என்ற சட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதன் விளைவாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுடைய கல்வி, கலாசார நிலையங்களையும் சொத்துக்களையும் சூறையாடி அழிப்பதுடன் தமிழ் மக்களையும் கொன்று குவிப்பதற்கும் இச் சட்டம் வழி அமைக்கிறது.

இச் சட்டத்தை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்று சங்கம் கோருகிறது.

இதற்கு எதிராக இன்று போராட முன்வந்திருக்கும் அன்னையர் முன்னணிக்குச் சகல மக்களும் ஆதரவு கொடுக்க வேண்டும்.

இப்படி வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தெ ஸ்டெப் உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 4 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 29-01-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org